## பவானி நகராட்சி (ஈரோடு மாவட்டம்) 21.04.2023–ம் தேதி வெள்ளிக்கிழமை நடைபெற்ற அவசர கூட்ட நடவடிக்கைகள் தீர்மானத்தின் உண்மை நகல்

**பொருள் எண்: 1**

இந்நகராட்சி பொது சுகாதாரப்பிரிவில் திடக்கழிவு மேலாண்மை பணிகளான வீடு வீடாக குப்பை வாங்குதல், வணிக நிறுவனங்களில் குப்பைகள் சேகரித்தல் போன்ற பணிகளை தனியார் சேவை வழங்குபவர் / முகமை / ஒப்பந்ததாரர் மூலம் ஒப்பந்தப்புள்ளி அடிப்படையில் மூன்றாண்டுகளுக்கு மேற்கொள்வது தொடர்பான பணிக்கு ஒப்பந்தப்புள்ளி கோருவதற்கு ஏற்கனவே நகர்மன்ற தீர்மான எண்:166, நாள்: 20.01.2023-ஆம் தேதியன்று அனுமதி வழங்கியுள்ளதன் பேரில் 27.03.2023-ஆம் தேதி ஒப்பந்தப்புள்ளி அழைப்பு விடுக்கப்பட்டது. 27.03.2023-ஆம் தேதியன்று கீழ்கண்ட நிறுவனங்கள் ஒப்பந்தப்புள்ளி அழைப்பில் கலந்து கொண்டன.

1. M/s Karthikeyan, RSK Tech Traders Private Ltd, No: 2/165, Thuraiyur to Uppliapuram Main Road, Venkatachalapuram, Thuraiyur(Tk), Trichy – 621 011.
2. M/s Ourland Engineering works Private limited, 70/1,3 rd Street, Anjugam Nagar, Jafferkhanpet, Chennai, Tamil Nadu – 600 083.

கலந்து கொண்ட மேற்படி இரண்டு நிறுவனங்களின் ஒப்பந்தப்புள்ளி தொழில்நுட்ப தகுதிகள் நிறைவு செய்துள்ளதன் பொருட்டு மேற்படி இரு நிறுவனங்களின் விலைவிகிதப்புள்ளி (Financial Bid) 03.04.2023ஆம் தேதியன்று திறக்கப்பட்டதில் இரு நிறுவனங்களும் குறிப்பிட்டுள்ள ஒப்பந்தப்புள்ளி விலைவிகிதம் பின்வருமாறு:

| வ.எண் | ஒப்பந்ததாரரின் பெயர் மற்றும் முகவரி | ஒப்பந்ததாரர் குறிப்பிட்டுள்ள ஒப்பந்தப்புள்ளி விலைவிகிதம்(டன் ஒன்றிற்கு) |
|---|---|---|
| 1 | M/s Karthikeyan, RSK Tech Traders Private Ltd, No: 2/165, Thuraiyur to Uppliapuram Main Road, Venkatachalapuram, Thuraiyur(Tk),Trichy 621011. | ரூ.5330/- |
| 2 | M/s Ourland Engineering works Private limited, 70/1,3 rd Street, Anjugam Nagar, Jafferkhanpet, Chennai, Tamil Nadu – 600 083. | ரூ.5350/- |

குறைவான ஒப்பந்தப்புள்ளி விலைவிகிதம் வழங்கிட்ட வரிசை எண்: 1-ல் குறிப்பிடப்பட்டுள்ள M/s Karthikeyan, RSK Tech Traders Private Ltd, No: 2/165, Thuraiyur to Uppliapuram Main Road, Venkatachalapuram, Thuraiyur(Tk), Trichy –621 011அவர்களின் ஒப்பந்தப்புள்ளி விலைவிகிதத்தினை மன்றம் ஏற்கலாம்.

**அலுவலக குறிப்பு:**

1. பொது சுகாதாரப்பணியின் அவசியம் கருதிM/s Karthikeya, RSK Tech Traders Private Ltd, Trichy ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் குறைவாக உள்ளதால் அந்நிறுவனத்திற்கு வேலை உத்திரவு வழங்கலாம்.
2. E.P.F, E.S.I, Insurance, Service Tax மற்றும் அரசு மூலம் ஒப்பந்தப்பணியாளர்களுக்கு நடைமுறைப்படுத்தப்படும் சட்டரீதியான செலவினங்கள் ஒப்பந்ததாரர் மூலம் சம்பந்தப்பட்ட அரசு நிறுவனங்களுக்கு செலுத்திடும் வகையில் மதிப்பீட்டுதொகை கணக்கிடப்பட்டு உள்ளதையும் அவ்வப்போது அரசு நடைமுறைப்படுத்திடும் விகிதத்தொகை மாறுபடின் மாறுபடக்கூடிய தொகையின் அடிப்படையில் செலவினத்தை கணக்கிட்டு கூடுதலாக செலவு ஏற்படின் அதற்கான தொகையை செலுத்தவும்.

**மன்றத்தீர்மானஎண் : 1** அனுமதிக்கப்பட்டது(ந.க.எண்.1529/2021/எச்1)

**பொருள் எண்: 2**

வார்டு எண். 15அந்தியூர் மேட்டூர் ரோடு பிரிவில் உள்ள பொது சுகாதார பிரிவு இருப்பு அறையினை முதலமைச்சரின் காலை சிற்றுண்டி திட்டத்திற்கு சமையல் அறை கூடமாக மாற்றி அமைத்தல் பணிக்கு மதிப்பீடு ரூ.7.00 இலட்சத்திற்கு நகர்மன்ற தீர்மான எண் 209 நாள் 31.03.2023அனுமதி அளித்துள்ளதின் பேரில் 11.04.2023 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்கண்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்புநோக்குப் பட்டியல் தயாரிக்கப்பட்டு மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண் | ஒப்பந்ததாரரின்பெயர் | மதிப்பீட்டுதொகைரூ. இலட்சத்தில் | ஒப்பந்தப்புள்ளிசதவிகிதம்அதிகம் / குறைவு |
|---|---|---|---|
| 1 | M/s K.கெம்பன் வீரமாத்திகான்ட்ராக்டர் முத்தூர், திருப்பூர் | 7.00 | 0.08% மதிப்பீட்டு விகிதத்தை விட குறைவு |
| 2 | திரு. எஸ். பாலசுப்ரமணியன், ஒப்பந்ததாரர், பவானி | | 1.25 % மதிப்பீட்டு விகிதத்தை விட அதிகம் |

**அலுவலககுறிப்பு:**

1. வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவாக, மதிப்பீட்டை விட 0.08 % சதவிகிதம் குறைந்த
ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள M/s.K.கெம்பன், வீரமாத்திகான்ட்ராக்டர் அவர்களின்
ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் ஏற்கலாம்.

2. பணியின் அவசர அவசியம் கருதி நகர்மன்றத் தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று வேலை
உத்திரவு வழங்கியமைக்கும் மன்றம் அனுமதி வழங்கலாம்.

**<u>மன்றத்தீர்மானஎண் : 2</u>அனுமதிக்கப்பட்டது**(ந.க.எண்.0422/2023/இ1)

**பொருள்எண்:3**

பவானி நகராட்சியின் 2022–2023–ம் ஆண்டிற்கான நிர்வாக அறிக்கை தயார் செய்து மன்றத்தின் பார்வைக்கும், ஒப்புதலுக்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

மன்றம் பார்வையிட்டு ஒப்புதல் வழங்கலாம்.

**<u>மன்றத்தீர்மானஎண் : 3</u>ஒப்புதல் வழங்கப்பட்டது**. (ந.க.எண் 539/2020/சி1)

**பொருள்எண்:4**

பவானி நகராட்சியில் பொதுசுகாதாரப் பிரிவில் திடக்கழிவுளை சேகரிக்க பயன்படுத்தப்பட்டு வரும் டாடா ஏஸ் வாகனம் TN 36 AL 4167 ன் பயன்பாட்டு சான்று முடிவடைய உள்ளதால் இவ்வாகனத்திற்கு பயன்பாட்டு சான்று பெற வாகனத்தில் உள்ள பழுதுகளை நீக்கம் செய்ய அரசு அங்கீகாரம் பெற்ற டாடா மோட்டார் நிறுவனத்தின் அங்கீகாரம் பெற்ற ABT INDUSTRIES LIMITED திண்டல் ஈரோடு என்ற நிறுவனத்தின் வாயிலாக பழுது நீக்கப் பணிகள் மேற்கொள்ளவும் இதற்காகும் உத்தேச செலவு ரூ.1.0 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது,

**அலுவலகக்குறிப்பு**

பொது சுகாதார அவசரஅவசியம் கருதி பணிகள் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. **<u>மன்றத்தீர்மானஎண் : 4</u>அனுமதிக்கப்பட்டது**(ந.க.எண் 321/2023/எச்1)

(ஒம்).E,சிந்தூரி.

தலைவர்,

பவானி நகராட்சி.

/உண்மைநகல்/

ஆணையாளர்(கூ/பொ)
பவானிநகராட்சி.